Lambeth

# பொதுவான வியாபார மீளத் திறத்தல் சரி பார்ப்பு பட்டியல்

## (GENERAL BUSINESS RE-OPENING CHECKLIST)

பூட்டு அடைப்பு (lock down) தளர்வின் பொழுது உத்தியோக பூர்வ அரசாங்க ஆலோசனையை செயல் படுத்த உங்களுக்கு உதவ இந்த சரி பார்ப்பு பட்டியல் ஆனது தயாரிக்கப் பட்டு உள்ளது.உங்களையும் உங்கள் இடம் வேலை செய்பவர்களையும், உங்கள் வேலை வளாகத்திற்குள் நுழையும் எவரையும் பாதுகாக்க உங்கள் வேலை வளாகத்தை கோவிட் 19 பாதுகாப்பாக மாற்றுவது முக்கியம் ஆனது ஆகும் (உதாரணமாக வாடிக்கையாளர்கள், ஒப்பந்தகாரர்கள், விநியோக ஊழியர்கள் போன்றவர்கள்.

| | | Actions / comments |
|---|---|---|
| **1.** | உங்கள் வியாபாரத்திற்கான **ஆபத்து மதிப்பீட்டை** மேற் கொள்வது உங்கள் உடைய பொறுப்பு ஆகும். இதன் மூலம் உங்களை, உங்கள் இடம் வேலை செய்பவர்களை மற்றும் வாடிக்கையாளர்களை தொற்று அபாயத்தில் இருந்து பாதுகாக்கின்றீர்கள். லம்பெத் கவுன்சில் இணையத் தளத்தில் ஆபத்து மதிப்பிட்டு முன் வடிவு உள்ளது.<br><br>எந்த ஒரு மாற்றத்தையும் உங்கள் இடம் வேலை செய்பவர்களுக்கு உடனுக்குடன் அறியத் தர வேண்டும். மேலும் எந்த ஒரு புதிய நடைமுறை செயற் படுத்த வேண்டி இருந்தாலும் அது பற்றி அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். | |
| **2.** | **வேலை செய்பவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் பயிற்சி**<br><br>வேலை செய்பவர்கள் வேலைக்கு ஏற்றவர்களா என சோதித்து பார்ப்பது உடன் அவர்கள் கோவிட் 19 இற்கு உரிய அறிகுறிகள்/ குணங்குறிகளைக் கொண்டு இருக்கவில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். அவை பின்வருவனவற்றை உள் அடக்கும்:<br>a. உயர் உடல் வெப்பநிலை<br>b. புதிய தொடர்ச்சியான இருமல்<br>c. வாசனை அல்லது சுவை உணர்வில் இழப்பு அல்லது மாற்றம்<br><br>(https://www.nhs.uk/conditions/coronavirus-covid-19/check-if-you-have-coronavirus-symptoms/<br><br>வேலை செய்பவர்களுக்கு ஏதாவது அறிகுறிகள் இருந்தால் அவர்களை வீட்டிற்கு அனுப்பி சோதனைக்கு உட்படுமாறு அவர்களுக்கு ஞாபகப் படுத்தவும். https://www.nhs.uk/conditions/coronavirus-covid-19/testing-and-tracing/get-an-antigen-test-to-check-if-you-have-coronavirus/<br><br>வேலை செய்பவர்களுக்கு உரிய ஆபத்து மதிப்பீட்டை நடாத்துதல் மேலும் இலகுவாக பாதிக்கப் படக் கூடிய வேலை செய்பவர்கள் (வரைவிலக்கணத்தை பார்க்கவும்) https://www.gov.uk/government/publications/staying-alert-and-safe-social-distancing/staying-alert-and-safe-social-distancing#clinically-vulnerable-people வீட்டில் இருந்து வேலை செய்வதை கருத வேண்டும். | |
| **3.** | **வேலை வளாகத்தில் சமூக இடை வெளி அளவுகளான 2 மீற்றர் தூரம் அனைத்து வேலை செய்பவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் இடையே பேணப் படுவதை உறுதிப் படுத்த வேண்டும்.**<br><br>a. உங்கள் உடைய வேலை வளாகத்தில் ஒரு நேரத்தில் அனுமதிக்கப் படும் வாடிக்கையாளர்களை மட்டுப் படுத்தவும். உங்கள் உடைய வேலை வளாகத்தில 2 மீற்றர் இடைவெளியை பராமரித்துக் கொண்டு அதே சமயம் எத்தனை பேரை உள் அடக்க முடியும் என கணித்துக் கொள்ளவும்.<br><br>b. பணம் செலுத்தும் இடத்திற்கு வரிசையில் நிற்கும் வாடிக்கையாளர்களை 2 மீற்றர் இடை வெளியில் நிற்க வைப்பதற்கு நாடா இடவும் அல்லது பெயின்ரினால் குறி இடவும். | |

c. வேலை வளாகம் முழுவதும் மக்களை 2 மீற்றர் இடைவெளியை பேணுமாறு கோரி அறிவுறுத்தல்களை எழுதி காட்சிக்கு வைக்கவும். https://www.lambeth.gov.uk/coronavirus-covid-19/information-for-businesses/printable-notices

d. வாடிக்கையாளர்களுக்கும் வேலை செய்பவர்களுக்கும மற்றும் விநியோகங்கள் உட் பட - இயலுமான இடங்களில் எங்கு வேண்டுமானாலும் ஒரு வழி அமைப்பை வேலை வளாகத்தினுள் பேணவும். இது விசேடமாக உங்கள் உடைய 2 மீற்றரிலும் குறைவான அகலம் உடைய இடைகழிகளுக்கு (aisles) இது பொருத்தமாக இருக்கும்.

e. உங்கள் வேலை வளாகத்தில் ஒன்றுக்கு மேற் பட்ட நுழை வாயில்கள் இருந்தால் ஒரு வாயிலை நுழை வாயிலாகவும் மற்றொரு வாயிலை வெளியேறும் இடமாகவும் ஒதுக்க வேண்டும்.

f. உங்கள் உடைய இடைகழிகள் 2 மீற்றர் அகலத்திற்கு குறைவாக இருந்தால் தட்டுகளில் அடுக்குவதற்கு நீங்கள் அதனை முழுமையாக அல்லது ஒரு பகுதி அளவில் மூட வேண்டும்.

g. கடையின் உள்ளே வேலை செய்பவர்கள் வாடிக்கையாளர்களுக்கு விதிகளை பின்பற்றுமாறு கூறுவதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

h. கவுண்டரில் உள்ள வேலை செய்பவர்களை பாதுகாக்க ஒரு போஸ்பெக்ஸ் (perspex) ஸ்கிறீனை அமைப்பதை கருத்தில் கொள்ளவும்.

i. உங்கள் உடைய ஆபத்து மதிப்பீடு ஆனது உங்கள் இடம் வேலை செய்பவர்கள் அருகிலே பணியாற்றுவதை தவிர்க்க முடியாது இருந்தால் அவர்களுக்கு முகத்தை மறைக்க ஏதாவது முகவுறைகள் வழங்கவும்.

j. தொடர்பு இல்லாத பணம் செலுத்தும் முறையை (contactless payment) ஏற்றுக் கொள்வதைக் கருத்தில் கொள்ளவும்.

k. வாடிக்கையாளர்கள் நுழை வாயிலில் இருந்து கடைக்குள் பார்க்க முடியா விட்டால் பிசியான நேரங்களில் நுழை வாயிலில் நீங்கள் ஒரு ஊழியரைக் கொண்டு இருக் கவேண்டும். அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு எப் பொழுது உள்ளே நுழைவது பாதுகாப்பு ஆனது எனக் கூற வேண்டும்.

l. வரிசையில் நிற்கும் வாடிக்கையாளர்களுக்கு 2 மீற்றர் தூரத்தைக் காட்ட முடிந்த வரை சுவரில் அல்லது தரையில் குறிப்பிடவும்.

m. உங்கள் உடைய வாடிக்கையாளர்களின் வரிசை அண்டையில் உள்ள வரிசை உடன் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று மேற் குவிய முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு இது நடப்பதை தவிர்ப்பதற்கான வழி முறைகளைக் கருத்தில் கொள்ளவும்.

**4. சுத்தப் படுத்துதல் மற்றும் கிருமி நீக்கம்**

a. உங்கள் உடைய வேலை செய்யும் ஆட்கள் கைகளை அடிக்கடியும் முழமையாகவும் கழுவுகிறார்களா என்பதையும் அவர்களுக்கு அதனைச் சரியாக செய்யத்தெரியுமா என்பதனையும் சரி பர்க்கவும். (https://www.youtube.com/watch?v=x3v521MTjio&feature=youtube)

b. உங்கள் உடைய கை கழுவும் பேசினை முழு நாளும் நன்கு கிருமி நீக்கம் செய்யவும். வேலை செய்பவர்களுக்கு நிறைய சவர்க்கரம் மற்றும் கை துடைக்கும் பேப்பர் தாள்களை கொடுக்கவும்.

c. வேலை செய்பவர்கள் தும்மல் மற்றும் இருமலை எறியக் கூடிய ரிசு பேப்பர் தாளில் வரும் போது பிடித்துக் கொள்ளவும் என கூறப் பட வேண்டும். அத்துடன் அதன் பின்பு அவர்கள் தங்கள் கைகளை நன்றாக கழுவிக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| | d. நுழை வாயில்களில் வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் பயன் படுத்த கை சுத்திகரிப்பு திராவகத்தை (hand sanitisers) (60% இற்கு மேற் பட்ட அற்க கோல்) வழங்கப் பட வேண்டும்.<br><br>e. நாள் முழுவதும் கையால் தொடப் படும் மேற் பரப்புகளை முழுமையாக கிருமி நீக்கம் செய்யவும். உதாரணமாக சொப்பிங் கூடை/ தள்ளு வண்டி கைப் பிடிகள், கதவு கைப் பிடியகள், நுழைவு கதவுகள், கிறடிற் கார்ட் றீடர்கள், விளக்கு சுவிச்சுகள் போன்றவை.<br><br>f. முடிந்த வரை கைத் தொடுகையைக் குறைக்க கதவுகளை செருகு கட்டைகளை வைத்து திறந்து விட்வும் (தீ வெளியேற்ற கதவுகளைத் தவிர) | |
| **5.** | **உங்கள் வேலைத் தள பாதுகாப்பு**<br><br>உங்கள் உடைய  வேலை வளாகம் சில காலமாக மூடப்பட்டு இருந்தால் உங்கள் சேவைகள் மற்றும் உபகரணங்கள் சரியாக செயற் படுகின்றனவா என சரி பார்க்கவும்.:<br><br>a. உங்கள் உடைய பிரதான எரி வாயு (gas) வழங்கல். இணைக்கப் பட்டு உள்ள எந்த உபகரணங்களையும் சரி பார்த்து எரி வாயு மணம் வருகின்றதா என சோதித்து பார்க்கவும்.<br><br>b. தீ வெளியேற்ற பாதை. தீ வெளியேற்ற பாதைகளை தெளிவாக வைத்து இருக்கவும். தீ அணைப்பு அலாரங்கள் மற்றும் தீயை அணைக்கும் கருவிகளை சோதித்து சரி பார்க்கவும்.<br><br>c. பீடை (Pest) கட்டுப்பாடு - பீடை செயற் பர்டகளை உள்ளேயும் வெளியேயும் சோதித்து பார்க்கவும். ஏதாவது பீடை இருக்க கூடிய அறிகுறிகள் இருந்தால் நீங்கள் ஒரு பீடை ஒப்பந்தகாரரை (pest contractor) அழைக்க வேண்டும்.<br><br>d. நீர் - பைப் குழாய்களை திறந்து அமைப்பை இயக்கவும். | |

**எனது வேலை வளாகம் கோவிட் 19 பாதுகாப்பானது என்பதை உறுதிப் படுத்த நான் மேற் கண்ட சோதனைகளை மேற் கொண்டேன் - எனக்கும் என்னிடம் வேலை செய்பவர்களுக்கும் மற்றும் எனது வேலை இடத்தில் நுழையும் எவருக்கும்**

**கையொப்பம் இடப்பட்டது..................வியாபாரத்தில் எனது பதவி ......................திகதி...................**

**மேலதிக தகவல்கள்** பாதுகாப்பாக வேலை செய்வதற்கான வழி காட்டுதல்களை அரசாங்கம் உருவாக்கி உள்ளது: https://www.gov.uk/guidance/working-safely-during-coronavirus-covid-19

**தொடர்புகளுக்கு** உணவு, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குழு foodhealthandsafety@lambeth.gov.uk